விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



**கல்யாண மாலை**
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 06 செவ்வாய்க்கிழமை (21.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

## தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 13ஆவது திருத்தம் தீர்வாகாது



### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்றுமே தீர்வாகாது என்பதை நான் முற்றிலும் ஏற்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள வாராந்த கேள்வி - பதில் அறிக்கையிலேயே இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். 15

## ஒன்றரை வயதுக் குழந்தை மூச்சுத்திணறலால் மரணம்

### புங்குடுதீவில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

திடீர் மூச்சுத்திணறல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அருள் டயஸ் கிவின்சலா என்ற 15

## எதிர்வரும் ஜனவரி மாதத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

(கொழும்பு)

இலங்கையில் இருப்பில் உள்ள மசகு எண்ணெய் எதிர் வரும் ஜனவரி 3ஆம் திகதி வரையே போதுமானதாக இருக்கும் என 15

## பெற்றோல் +35/= டீசல் +24/= மண்ணெண்ணெய் +11/=

# எரிபொருளின் விலையை அதிகரிக்காவிடின் பேரழிவு

### மத்திய வங்கி ஆளுநர் நிதியமைச்சருக்கு கோரிக்கைக் கடிதம்



*(கொழும்பு)*

பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்த எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## கூப்பன் அடிப்படையில் உணவுப் பொருட்கள்

### அமைச்சர் வாசு யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களை கூப்பன் அடிப்படையில் வழங்கும் யோசனையை அமைச்சர் வாசுதேவ 15

### 13ஆவது திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில்

# தமிழ் பேசும் கட்சிகள் கொழும்பில் இன்று பேச்சு

### இறுதிக் கூட்டறிக்கை இன்று வெளியாகும்

*(கொழும்பு)*

**தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக, ஒன்றிணைந்து செயற்படும் நோக்கில் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான மூன்றாம் கட்ட சந்திப்பு இன்று முற்பகல் கொழும்பில் இடம்பெறவுள்ளது. இதன்போது இறுதிக்கட்ட கூட்டறிக்கை வெளியாகும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இது தொடர்பான 2ஆம் கட்ட சந்திப்பு கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கல 15

## கொரோனாவால் 19 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 19 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய 15

## கிளிநொச்சியில் வீடு தீயில் எரிந்து நாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விசமிகளால் வீடொன்றுக்கு தீவைக்கப்பட்டதனால் பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகி உள்ளதாக தெரி 15

## இந்திய மீனவர்கள் 14 பேர் நேற்றும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் 15

## நல்லூர் முடமாவடிச் சந்தியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முடமாவடிச் சந்தியில் உயிரிழந்த நிலையில் சடலம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கந்தர்மடம், பழம் வீதியில் வசிக்கும் 67 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையான வைத்தியலிங்கம் செல்வரெத்தினம் என அடையாளம் காணப் 15

### வவுனியா கொக்குவெளிப் பகுதியில்

## கிணற்றில் நீராடச் சென்ற 16 வயதுச் சிறுவன் மாயம்

### தேடும் பணி தீவிரம்

(வவுனியா)

வவுனியா கொக்குவெளிப் பகுதியில் கிணற்றில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் மாயமாகியுள்ளதுடன் அவரை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா கொக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஆணையைப் பெற்ற விடயத்துக்கே கட்சி ஒப்பமிடும்

## தமிழரசுக் கட்சி தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பில் இன்று முற்பகல் கூடும் தமிழ் பேசும் மக்களின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்குபற்றும். ஆனால் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் பல்வேறு தேர்தல்களில் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஊடாகத் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற விடயங்களுக்கு உட்பட்டதான ஆவணங்களில் மட்டுமே தமிழரசுக் கட்சிகையெழுத்திட வேண்டும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று கொழும்பிலுள்ள சம்பந்தன் எம்.பியின் இல்லத்தில் கூடியது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஞா)


# வாழ்த்து

எமது தெல்லிப்பளை பிரதேச செயலகம்
தேசிய உற்பத்தி திறனாக்கல் போட்டியில்
அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றதையிட்டு
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இதற்காக முயற்சி எடுத்த வலி. வடக்கு பிரதேச
செயலருக்கும் சக உத்தியோகத்தர்களுக்கும் மயிலிட்டி
மீள் குடியேற்ற சங்கத்தினரும்
மயிலிட்டி மக்களும் தங்கள் பணி
சிறப்பாக தொடர வேண்டும் என்று
வாழ்த்துகின்றோம்.



**யோ. அலோசியஸ்**
தலைவர்
மயிலிட்டி மீள் குடியேற்றச் சங்கம்

(C-3319)


# நேர்மைத்திறன் மிக்கவர் மூத்த சட்டத்தரணி கேசவன்

## பேராசிரியர் சண்முகலிங்கன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

நியாய மனதும் நேர்மைத்திறனும் மிக்க மூத்த சட்டத்தரணி கேசவன் அவர்களின் இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ் இரங்கல் செய்தியில்,

கேசவன் அண்ணனின் திடீர் மறைவு நெஞ்சிலே எழுதும் துயரம் தாங்கமுடியாதது. தந்தையார் சட்டத்தரணியும் சமூக ஆன்மீகத் தலைவருமான கனகரத்தினம் அவர்களின் வழியில் நிமிர்ந்தது அவர் வாழ்வு.

யாழ். நீதிமன்ற பதில் நீதவான், யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்க செயலாளர், எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர், திவ்விய ஜீவன சங்கத் தலைவர் என விரிந்தது அவர் மேலான பணிகள்.

அவரோடு வாழ்ந்த பொழுதுகளின் மேன்மையினை உரைத்திட வார்த்தையில்லை. ஈடுசெய்ய முடியாத இழப்பினில் தவிக்கும் உறவுகளோடு அவர் மேலான நினைவுகளைக் காக்கும் உறுதியுடன் பிரார்த்தனை செய்வோம் என்று குறிப்பிட்டுள்ளார். (ஞா)


**அரசாங்க அறிவித்தல்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2021.11.09 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 2021.12.30 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலாளருக்காக,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(C-3315)



# மரண அறிவித்தல்



பிறப்பு 14 – 09 – 1956

இறப்பு 20 – 12 – 2021

## கந்தசாமி ஜெகன்மோகன்

பருத்தித்துறை தென்னிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நாவலடி லேன் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெகன்மோகன் அவர்கள் நேற்று (20.12.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் வசந்தி அவர்களின் அன்புக் கணவரும் நிர்மலன் (கனடா), காலஞ்சென்ற நித்தியா மற்றும் நிசாந்தினி, கஜரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிறோஜினி (கனடா), ராயேந்திரன், கணேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் றொக்சன், கரிசன், றொசான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (21.12.2021) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (9167)

நாவலடி லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்



# 45ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

அமரர்
## வேலுப்பிள்ளை சிவயோகன்

(பொறியியலாளர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்)



சிறந்த நற்சிந்தனைகள் திடமே எண்ணி
சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி
என்பவற்றை சீராக செய்து எமது நிலையம்
ஏற்றமுற தாங்கள் ஆற்றிய உயர்ந்தபணி
எமது மைதானத்தில் கட்டடமாய் உயர்ந்து
நிற்கின்றது. உங்களை மறவோம்.
உங்கள் சேவைகளை மறவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திதி : 21.12.202

(9165)

தங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச.நிலைய மக்களும்
நிர்வாகத்தினரும் - 2021



# 2ஆம் மொழிச் சிங்கள ஆசிரிய பயிற்சியும் வேலை வாய்ப்பும்

இந்து பௌத்த கலாசார பேரவையானது கல்வி அமைச்சின் ஆலோசனைக் கிணங்க யாழ். மாவட்டத்தில் மேலும் 50 தமிழ்மொழி மூலம் சிங்கள ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதால் ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிகள் விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் ஆர்வமும் தேர்ச்சியும் உள்ள மாணவர்கள் தை மாதம் (15.01.2022) 15ஆம் திகதிக்கு முன்னர் எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு துரிதமாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ஆரம்ப சிங்கள அறிவு இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- க.பொ.த (உ/த) ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- வயதெல்லை 20 - 35
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(9157)

தொடர்புகளுக்கு
செயலாளர்
இந்து பௌத்த கலாசார பேரவை,
யாழ்ப்பாணம்.
076 028 2693


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைசார் கருத்தியலை அறியவைக்கும் மாண்பு வலம்புரிக்குரிய தனித்துவம்

## வாழ்த்துச் செய்தியில் கிளி.மாவட்ட அரச அதிபர் புகழாரம்



பல்துறைசார் விடயங்களில் தனது கருத்தியலை முன்வைத்து தனக்கான ஒரு சிறப்பிடத்தை வலம்புரி நாளிதழ் கொண்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் புகழாரம் சூட்டியுள்ளார். அவர் வழங்கிய வாழ்த்துச் செய்தியில்,

தமிழர் தம் தேசத்தில் தன்னிகரற்று ஒளிவீசும் ஆதவன் போல் தோன்றி நடுநிலை பேணி செய்திகளை உடனுக்குடன் வழங்கும் வலம்புரி நாளிதழின் 22 ஆம் அகவை நிறைவுற்று 23 ஆம் அகவையில் இனிதே கால் தடம் பதிக்க எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

பத்திரிகையுலகில் ஒரு வரப்பிரசாதமாக திகழ்ந்து உள்ளூர் செய்திகளையும் உலகியல் செய்திகளையும் ஒன்றுகூட்டி ஒரே பார்வையில் நாம் பயன் பெறவும் அறிவுத் திறனை வளர்த்திடவும் இடையறாது பணிபுரியும் நாளிதழ் வலம்புரிஎன்றால் அது மிகையாகாது.

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை...

எனும் உலகப் பொதுமறையினை நிதர்சனப்படுத்தி பக்கச்சார்பின்றி பல்வேறு செய்திகளை நாம் அறிய வழிவகுத்த நாளிதழாய் திகழ்கிறது வலம்புரி.

அரசியல், சமூக, பொருளாதாரம், இலக்கியம், விளையாட்டு, அபிவிருத்திப் பணிகள் எனப் பல்வேறு துறைகளிலும் தன் கருத்தியலை மக்கள் அறியவைத்த மாண்பு வலம்புரிக்குரிய தனித்துவமாகும்.

பொதுமக்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றினை தீர்த்து வைப்பதற்கான விழிப்புணர்வை சமூக, அரசியல் கர்த்தாக்களுக்கு உணர்த்துவதன் மூலம் சமூகத்திற்கு நல்லதோர் வழிகாட்டியாக விளங்கும் நாளிதழ் வலம்புரியாகும்.

மேலும் மாணவர் மத்தியில் கல்விசார் விடயங்களை வெளிக்கொணர்வதற்கு நிலைக்களமாக அமைந்து நாட்டின் பெரும் சமூகப் பணியை மேற்கொள்வது இப்பத்திரிகையின் சிறப்பாகும்.

இப்பூமியில் தலைநிமிர்ந்து தளராது மென்மேலும் தன் பணியைத் திறம்படச் செயற்படுத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# ஈழத்தமிழர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் சீனா

## இந்தியாவிற்கு சிக்கல் என்கிறார் ராமதாஸ்

(சென்னை)

இலங்கை தமிழருக்கு சீனா உதவுவதால் இந்தியாவுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்கான சீன தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கி சென்ஹொங் இலங்கை தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்துள்ளார்.

மீனவர்களுக்கு 75 இலட்சம் ரூபாய்க்கும் கூடுதலான உதவிகளை வழங்கியுள்ளார். இலங்கை தமிழர்களின் அழிப்புப் போருக்கு அனைத்து வகைகளிலும் சீன அரசு அரசுதான் உதவியது.

இலங்கை தமிழர்கள் மத்தியில் தனக்கு நற்பெயரை ஏற்படுத்தி இலங்கையின் வடக்கு பகுதியிலும் கால் பதிக்க வேண்டும். அதன் வாயிலாக இந்தியாவுக்கு நெருக்கடி தர வேண்டும் என்பதே சீனாவின் நோக்கம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# வெளிநாட்டு கையிருப்பை அதிகரிக்க நடவடிக்கை

## நிதி அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் குறைந்து வரும் வெளிநாட்டு கையிருப்பை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் அதற்கான திட்டங்களை வகுத்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார்.

இதேவேளை ஆண்டின் இறுதிக்குள் மத்திய வங்கியினால் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வெளிநாட்டு கையிருப்புகளை திரட்ட முடியும் என ஆளுநர் கப்ரால் தெரிவித்தார். (நி-5)

# 13 தங்கப்பதக்கங்களை பெற்ற மருத்துவபீட மாணவி தர்ஷிகா



(அக்கரைப்பற்று)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் எம்.பி.பி.எஸ்.இறுதிப்பரீட்சையில் முதல் தரத்தில் தேர்ச்சி பெற்ற அக்கரைப்பற்றை சேர்ந்த தணிகாசலம் தர்ஷிகா 13 தங்கப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டமளிப்பு விழாவின் போதே வழங்கப்படும் 37 தங்கப் பதக்கங்களில் சிறந்த மருத்துவ பீட மாணவ விருது உட்பட 13 தங்கப்பதக்கங்களை இவர் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

அத்தோடு குறித்த பட்டப்படிப்பு ஆண்டுக்குரிய முதல்நிலையாளராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஓய்வு நிலை அதிபர் தணிகாசலம் மற்றும் குமுதா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியான தர்ஷிகா இச்சாதனையை புரிந்து பெற்றோருக்கும் பாடசாலைக்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ளார். (நி-5)

# விமானங்களுக்கான எரிபொருளுக்கு டொலரை வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

விமானங்களுக்கான எரிபொருளை விநியோகிப்பதற்கு தேவையான டொலரை வழங்குமாறு ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திடம் பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் மேலும் 330 மில்லியன் டொலரை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து உத்தியோகபூர்வமாக விமான சேவை நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2, உயரம்: 5'6"<br>கி.பா: 37 ½ சூரி, செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L ஆட்டோ வான் சொந்த வாகன உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12052 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: செவ் 11 சூரி 7 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மணமகன் சைவபோசனம்<br>தொ.இ:G/12209 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 170 cm<br>கி.பா: 18 செவ் 3 சூரி 12 இல்<br>தகைமை/தொழில்: B.E Polymer Engin eer Nippon Plastic Industry<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை செய்யும் மண மகள்<br>தொ.இ: B/12053 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2 உயரம்:5'<br>கி.பா:32¾ செவ் 6 சூரி 8 இல்<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12211 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம், உயரம்: 5'11"<br>கி.பா: 9 செவ் 11 சூரி 10 இல்<br>தகைமை/தொழில்:Msc அவுஸ்திரேலியா PR இல்லை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/12054 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்:5'5"<br>கி.பா: சூரி, செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி DO<br>எதிர்பார்ப்பு:தகுந்த மணமகன்<br>தொ.இ:G/12213 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3, உயரம்: 170 cm<br>கி.பா:செவ் 2 சூரி 1 இல்<br>தகைமை/தொழில்: (BENG)com.Sc) TrainingProgram Officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/12055 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>கி.பா:15 செவ் 10 சூரி 5 இல்<br>தகைமை/தொழில்: O/L கேக் ஐசிங் ஓடருக்கு செய்து கொடுப்பவர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மணமகன் விவாகரத்தானவர் பிள்ளைகள் இல்லாத விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ:G/12220 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி க்ளேடியேட்டர்ஸ் முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி

லங்கா பிரீமியர் லீக் இருபது -20 தொடரின், இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிப் போட்டியில் வெற்றிபெற்று காலி க்ளேடியேட்டர்ஸ் அணி முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

தோல்வியை தழுவிய ஜப்னா கிங்ஸ் அணிக்கு இரண்டாவது வாய்ப்பாக, இறுதிப் போட்டிக்கான இரண்டாவது தகுதி போட்டியில் தம்புள்ளை ஜியண்ட்ஸ் அணியை எதிர்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி, நாளை மறுதினம் 23ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெறும் சம்பியன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில், காலி க்ளேடியேட்டர்ஸ் அணியை எதிர்கொள்ளும்.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் நடைபெற்ற இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதிப் போட்டியில், காலி க்ளேடியேட்டர்ஸ் அணியும் ஜப்னா கிங்ஸ் அணியும் மோதின.



இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய காலி க்ளேடியேட்டர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 188 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குசல் மெண்டிஸ் 85 ஓட்டங்களையும் தனுஷ்க குணதிலக்க 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஜப்னா கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், திசர பெரேரா மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சுரங்க லக்மால் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 189 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணி, 16.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், காலி க்ளேடியேட்டர்ஸ் அணி 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரஹமனுல்லா குர்பாஸ் 59 ஓட்டங்களையும் வனிந்து ஹசரங்க 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

காலி க்ளேடியேட்டர்ஸ் அணியின் பந்துவீச்சில், நுவான் துசார 5 விக்கெட்டுகளையும் மொஹமட் ஆமிர், இசுரு உதான, புலின தரங்க மற்றும் அன்வர் அலி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 53 பந்துகளில் 4 சிக்சர்கள் 7 பவுண்டரிகள் அடங்களாக 85 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட குசல் மெண்டிஸ் தெரிவுசெய்யப்பட்டார். (4)

# 33 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா ஆரம்பம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்திவரும் தேசிய விளையாட்டு விழாவின் 2021 ஆம் ஆண்டுக்கான 33 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா சுகததாச விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் கோலாகலமாக ஆரம்பமாகி இடம் பெற்று வருகிறது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் தமிந்த விக்ரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற குறித்த ஆரம்ப நிகழ்வில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே பிரதம அதிதியாக கலந்து கொண்டார்

நிகழ்வில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அனைத்து மாவட்டங்களின் இளைஞர் யுவதிகளின் அணிவகுப்பு மரியாதையை தொடர்ந்து ஒலிம்பிக் சுடரேற்றப்பட்டு 33 வேட்டுக்கள் முழங்க விளை யாட்டு விழா ஆரம்பமாகியது.

இதனை தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் இடம் பெற்று வருகிறது.

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ,கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் இளைஞர் யுவதிகள் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இளைஞர் யுவதிகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர்யுவதிகள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (4-281)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2474

Search for people, places and things

### விகிர்தன்

காதல் என்பது சாதாரண காய்ச்சல் மாதிரி... தப்பிச்சிடுலாம்...



கல்யாணம் என்பது கொரோனா மாதிரி தப்பிக்க வாய்ப்பில்லை...

### பாதினி

இந்த உலகத்தில 2 பேரை ரொம்ப நேரம் முறைச்சு பார்க்க முடியாது...



முதலாவது சூரியன்.. இரண்டாவது மனைவி...

### துர்சனா

பாஸ் பாஸ் நம்ம தெருவுல எல்லா வீட்டுக்கும் கலண்டர் குடுகுறாங்க வாங்க உங்களுக்கு புடிச்ச படத்த செலக்ட் பண்ணுங்க.



வருசம் வருசம் கலண்டர் மாறுதே தவிர வாழ்க்கை மட்டும் அப்படியே தான்டா இருக்கு.

### கதிர்வேல்

எதையுமே உருவாக்குறது கஷ்டம் அழிக்கிறது சுலபம்னு சொல்லுவாங்க



ஆனா 'தொப்பை'உருவாக்குறது சுலபம் அழிக்கிறது கஷ்டம்

### கனிமொழி

நம்ம குருப் பசங்க தான் போல ஃபேஸ்புக்ல நிறைய கேர்ள் ப்ரண்ட்ஸ் மாட்டும்ன்னு சொன்னானுவ...நமக்கு இன்னைக்கு எத்தன கேர்ள் ப்ரண்ட்ஸ் மாட்டுதுனு பாப்போம்..?




ஆத்தாடி...ஓங்க ஃபேஸ்புக்ல தீய வைக்க

### துலக்ஷன்

2022 ஆம் ஆண்டு உங்களுக்கு ஆனந்தமா... அமோகமா...இருக்கப்போகுது...



இதே தான் போன வருஷமும் சொன்னாரு..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**21.12.2021**
**மார்கழி 06, செவ்வாய்க்கிழமை**
**துதியை பிற்பகல் 2.04 மணிவரை**
**புனர்பூசம் முன்னிரவு 9.54 மணிவரை**
**சுபநேரம் 10.54-12.24 மணிவரை**
**இராகு காலம் -3.24-4.54 மணிவரை**
**சந்திராஷ்டமம்- கேட்டை, மூலம்**

**வளவன்**


மேஷம்

பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு குதூகலம் தரும்.


மிதுனம்

நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், இனிய செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், பயணங்களால் பலனுண்டு, கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.


சிம்மம்

உறவினர்களைக் காண பயணங்கள் மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சயன சுகக் குறைவான நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.


கன்னி

சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.


துலாம்

குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.


விருச்சிகம்

சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.


தனுசு

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.


மகரம்

நட்பு வட்டம் விரிவடையும் நாள், நினைத்த காரியம் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், செய் தொழில் மேன்மையுண்டு.


மீனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு.

**நமது எண்ணத்தின் படி தான் வாழ்க்கை அமையும்**
**எனவே நல்லதையே எண்ணுங்கள்**


# கண்ணீர் அஞ்சலி

## திரு. முத்தையா யோகராஜா அவர்கள்



யாழ்ப்பாணம் சைவ பரிபாலன
சபையின் ஆயுள் கால மூத்த உறுப்பினர்
திரு. **முத்தையா யோகராஜா**
அவர்கள் 19.12.2021 அமரத்துவம்
அடைந்த செய்தி அறிந்து மிகுந்த
வேதனை அடைகின்றோம்.
அன்னார் சபையின்
நிர்வாக சபையின் நீண்டகால
உறுப்பினராகவும்
பொருளாளராகவும் செயற்பட்டு
சபையின் பணிகளுக்கு உறுதுணையாக
செயற்பட்டவர்.

**அன்னாரின் மறைவுக்கு சைவ பரிபாலன சபை ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**பொது செயலாளர். சைவ பரிபாலன சபை**
**இல. 66. கல்லூரி வீதி.**
**நீராவியடி. யாழ்ப்பாணம்.**

(c-3312)


# 10,000 ரூபாய் நாணயத்தாளை அச்சிடும் திட்டம் இல்லை

## நிதி அமைச்சு

(கொழும்பு)

புதிதாக பத்தாயிரம் ரூபாய் நாணயத்தாளை அச்சிடும் திட்டம் எதுவும் இல்லை என நிதி அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பில் பரவும் வதந்திகளில் உண்மையில்லை என அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிலர் தவறான தகவல்களை உருவாக்குவதாக செயலாளர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)


# மரண அறிவித்தல்



**தோற்றம்:- 24.08.1955**
**மறைவு:- 15.12.2021**

(c-3311)

## திருமதி. ஞானம்மா கந்தசாமி

அச்செழு வடக்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஞானம்மா கந்தசாமி அவர்கள் 15.12.2021 அன்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று சுவிட்சர்லாந்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சீனியர் குடும்பத்தினர்**
**அச்செழு வடக்கு.**
**077 274 2593**



# Vacancy Notice for Project Officer

**We are an Industrial Chamber and we are seeking for a dynamic, enthusiastic and dedicated male individual to strengthen our team as a Project Officer (immediate vacancy).**

**The ideal candidate should fulfil following prerequisites**

- Minimum two to three years of working experience in the field of business development activities of micro, small and medium enterprises.
- Should be able to work with minimum supervision
- Having computer literacy
- Individuals reside close to Jaffna is preferred
- Communication skill with English knowledge is preferred
- Keeping records and prepare relevant reports in English are essential
- Age limit between 28-45
- Frequent field visits within Northern Province are essential

The selected candidate will be offered an attractive remuneration package based on experience and qualifications.

If you feel you are the right candidate, please forward your resume mentioning the post applied for in the subject line **on or before 31st of December 2021** to info@cciy.lk **or** you can post it to Chairman, Chamber of Commerce and Industries of Yarlpanam (CCIY), No.55, Kachcheri Nallur Road, Jaffna.

For further information, please dial 021 222 6608, 070 366 3600

(c-3318)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட பண்பாட்டு விழா





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பண் பாட்டு விழா நேற்று முன்தினம் காலை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் முதன்மை விருந்தினராகவும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் சிறப்பு விருந்தினராகவும்கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் கலைஞர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப் பட்டதோடு கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர் கௌரவிப்பு "இளங் கலைஞர் விருது" மற்றும் "யாழ் முத்து" விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (4-5-33)

# மாற்றுத்திறனாளிகள் பொருத்தமான தொழில் வாய்ப்பை தெரிவு செய்ய வேண்டும்

## யாழ். அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

மாற்றுத் திறனாளிகள் தமக்கான பொருத்தமான தொழில் வாய்ப்பினைத் தெரிவு செய்து சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் ILO நிறுவனத்தின் நிதி உதவியுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்சந்தை கடந்த சனிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மாற்றுத் திறனாளிகள் தமக்கு பொருத்தமான தொழில் வாய்ப்பினைத் தெரிவு செய்து சமூகத்தில் முன் மாதிரியாகத் திகழ வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்கும் தொழில் நிறுவனங்களிற்குத் நன்றிகளைத் தெரிவித்ததுடன் சமூக அபிவிருத்தியில் மாற்றுத் திறனாளிகளின் வகி பங்கு அதிகமாகவுள்ளது. எனவே, நீங்கள் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(4-5-18)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்று மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)

# வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர்காவற்றுறை - நாரந்தனை பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்து வாள் வெட்டு தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 26 வயதான நபரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி நாரந்தனை பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து, இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சந்தேக நபர் தலைமறைவாகி இருந்தார்.

கடந்த 3 மாதங்களாக தலைமறைவாக இருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-33)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல், சங்கு போன்றன எதிர்வரும் 07.01.2021 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனை செய்யப்படவுள்ள மணல், சங்கு போன்றவற்றை குறித்த தினத்தில் ஏலவிற்பனை நேரத்திலிருந்து அரைமணிநேரத்திற்கு முன்னர் பார்வையிட முடியும்.

ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணமாகவோ செலுத்தி பெற்றுக் கொள்வதுடன் நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றையதினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஏலத்தினை கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டுடன் வருகைதரல் வேண்டும்.

ஏலவிற்கனையின் போது சுகாதார நடைமுறையினை பின்பற்றி கலந்துகொள்ள வேண்டுமென நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# பிள்ளையார் சிலை மாயம் பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை குமார ஆலயப் பிள்ளையார் சிலையைக் காணவில்லை என காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

காங்கேசன்துறை குமார கோவில் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகவிருந்த காலப் பகுதியில் மேற்படி ஆலய வளாகத்தினுள் விகாரை ஒன்று அமைக்கப்பட்டது.

மேற்படி பகுதி விடுவிக்கப்பட்டுப் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டதை அடுத்துக் குமார கோவில் புனரமைக்கப்பட்டு ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம் பெற்று வந்தன.


இந் நிலையில் கடந்த 09 ஆம் திகதி இரவு ஆலயத்திலிருந்த விநாயகர் சிலை இருப்பிடத்திலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-5-18-33)

## மீண்டும் ஒலிக்கும்

# மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள்

(யாழ்ப்பாணம்)



யாழ்.நகர் பகுதியில் நீண்டு நிமிர்ந்து மிடுக்கோடு காட்சியளிக்கும் யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அதன் அடையாளங்களில் ஒன்றாக பார்க்கப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் மணிக்கூடுகள் நீண்ட காலத்தின் பிற்பாடு நேற்று முதல் இயங்க ஆரம்பித்தன.

அத்துடன் மிக விரைவில் மணிக்கூட்டுக்கோபுர மணியோசை மீண்டும் பாரம்பரிய மிக்க யாழ்.வாத்தியத்தின் நாத ஒலியாக யாழ்.நகர் எங்கும் ஒலிக்கும். (4-5-33)



யாழ்.மாவட்ட கலை கலாசார பேரவையால் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த ஏ. சுரசாகித்யனுக்கு இளம் கலைஞர் விருது நேற்று முன்தினம் யாழ். மாவட்ட பண்பாட்டு விழாவில் வழங்கப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 900 | 900 | 850 | 1000 |
| தக்காளி | 500 | 450 | 380 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 340 | 460 | 500 | 550 |
| பூசணி | 60 | 70 | 60 | 80 |
| புடோல் | 340 | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150-250 | 320 |
| பெரிய வெங்காயம் | 240 | 230 | 220 | 220 |
| பாகற்காய் | 650 | 450 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 110 | 160 |
| பயற்றங்காய் | 550 | 500 | 500 | 400 |
| லீக்ஸ் | 340 | 360 | 350 | 440 |
| பீற்றூட் | 280 | -- | -- | 320 |
| கறிமிளகாய் | 450 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 380 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 380 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 80 |
| தேசிக்காய் | 250 | 250 | 230 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 450 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 200 | -- | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 25 | 40 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய- சீன முரண்பாடுகளில் தமிழ் மக்களை பகடைக்காய்களாக மாற்றாதீர்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

**இதுவரை காலமாக தமிழர்களின் நலன்களில், அரசியல் தீர்வு விடயங்களில் அக்கறை செலுத்தாத சீனா தற்போது வடக்கில் கவனம் செலுத்த வேண்டிய தேவை என்ன? இந்தியாவை விடுத்து சீனாவுடன் நட்புறவை கையாள்வது எமக்கு பாதகமாக அமையும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

கடந்த வாரம் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த சீனத்தூதுவர் கீ சென் ஹொங் வடக்கில் பல்வேறு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் தமிழர் அரசியல் தரப்பு இதனை விமர்சித்துள்ளது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலைமையில் சீனத்தூதுவரின் வடக்கு விஜயம் குறித்து எம்மத்தியில் பல கேள்விகள் எழுகின்றன. இதுவரை காலமாக சீனாவினால் எந்தவித ஒத்துழைப்புகளும் எமக்கு கிடைத்திருக்காத நிலையிலும், எமது அரசியல் பிரச்சினைகள் குறித்து இதுவரை காலமாக சீனா கவனம் செலுத்தாத நிலையிலும் தற்போது உடனடியாக வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனத்தூதுவர், வேட்டி கட்டிக் கொண்டு நல்லூர் கோவிலுக்குச் செல்வதும், எமது மீனவர்களுக்கு உதவிகளை பெற்றுக்கொடுப்பதும் ஏன்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தற்போதுள்ள நிலையில் இலங்கை அரசாங்கதிற்கும் சீன அரசாங்கத்திற்கும் இடையில் சில பிணக்குகள் இருக்கின்ற காரணத்தினால், இவ்வாறான ஒரு சூழலில் தமிழ் மக்களை ஈர்க்கும் விதமாக சீனாவின் நகர்வு அமைந்துள்ளது.

இந்தியாவின் செயற்பாடுகளை கருத்தில் கொண்டும் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள சீனாவுக்கு வடக்கில் காலடி எடுத்து வைக்க வேண்டிய தேவை உள்ளது என்றே கருதுகின்றோம்.

இந்திய - சீன முரண்பாடுகளில் எம்மை பகடைக்காய்களாக மாற்றிக்கொள்ளக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடன் இந்தியா மிக நெருக்கமாக செயற்பட்டு வருகிறது.

எமது உள்ளக விவகாரங்களில் அவர்களின் ஆர்வமும் தலையீடும் காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் நாம் இந்தியாவை விடுத்து சீனாவுடன் நட்புறவைக் கையாள்வது எமக்குப் பாதகமாக அமையும்.

மேலும், சீனா எமது மக்களுக்கு உதவிகளை செய்கிறது, மீனவர்களுக்கு உதவிகளை செய்கிறது என்பதற்காக இந்தியாவை நாம் புறக்கணிக்க முடியாது. அதேவேளையில் இந்தியா இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எவ்வாறு இருப்பினும் சர்வதேச பிரச்சினைகளில் தமிழ் மக்களை உள்நுழைத்துவிட்டு இறுதியாக எம்மை பகடைக்காய்களாக மாற்றிவிடக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# நாட்டை பாதுகாக்க ஒப்படைத்த தலைவர்களால் வீட்டைக்கூட பாதுகாக்க முடியாத நிலை

## அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்தோம். இந்த ஆட்சியில் வீட்டைக் கூடப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் புத்தாண்டினைச் சிறப்பாக கொண்டாட முடியாத நெருக்கடி நிலையை அரசாங்கம் தோற்றுவித்துள்ளது. இவர்கள் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் தலைவர்களாயின் இந்நேரம் பதவி துறந்திருப்பார்கள் என சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நல்லாட்சி அரசாங்கம் மக்களாணைக்கு முரணாக செயற்பட்டதைப் போன்று தற்போதைய அரசாங்கமும் செயற்படுகிறது.

லிற்றோ நிறுவனத்தின் தலைவரை பதவியில் இருந்து நீக்கக்கூட அரசாங்கத்திற்கு தற்துணிவு கிடையாது.

அனைத்து துறைகளிலும் ஊழல் மோசடி அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயு கசிவுடனான வெடிப்புச் சம்பவமும் ஒரு மோசடியாக இருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

அத்தியாவசிய பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில் உள்ளன.

காசு கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு பொது மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என தேரர் தெரிவித்தார். (நி-5)

# முதலாம் தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஏப்ரலில் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் முதலாம் தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.



பாடசாலைகளின் தவணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முடிவடைந்து மீண்டும் ஜனவரி 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஜனவரி மாதத்தின் மூன்றாம் வாரத்தில் இடம் பெறவுள்ளதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதத்திலும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மே மாதத்திலும் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

(கொழும்பு)

உர நெருக்கடியால் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய போதே பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினாலேயே உரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும் இதுவே மரக்கறி மற்றும் அரிசியின் விலை அதிகரிப்புக்கு காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை இவ்வாறான நெருக்கடி நிலையின் போது அரசாங்கத்தின் உறுப்பினர்கள் எவ்வாறு வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்கின்றனர் என்றும் காவிந்த ஜயவர்த்தன கேள்வியெழுப்பினார். (நி-5)

31ம் நாள் நினைவில் துயர் பகிர்கின்றோம்

அமரர்.திருமதி.சரஸ்வதி மரிசிலின்



பிறப்பு 1949 07 17

இறப்பு 2021 11 21


அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கான இந்நாளில் அவரின் குடும்பத்தினருக்கு துயர் பகிர்வதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(C-3313)
சி.ஜெயக்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டக அழகுப் போட்டி

# சிகிச்சை மூலம் அழகை மெருகூட்டியதால் 43 ஒட்டகங்கள் தகுதி நீக்கம்



(ரியாத்)
ரியாத் பாலைவனத்தில் ஆண்டுதோறும் ஒட்டகத் திருவிழா நடைபெறுகிறது. இதையொட்டி அழகான ஒட்டகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த போட்டியில் பங்கேற்கும் ஒட்டகங்கள் அதன் உண்மைத் தோற்றத்துடன் இருக்க வேண்டும் என்பது விதிமுறை.

ஆனால் இந்த விதிகளை மீறி போடெக்ஸ் என்ற ஊசி போட்டு ஒட்டகங்களின் உதடு மற்றும் கூம்புப் பகுதியை அறுவைச் சிகிச்சை செய்தும் அழகு சாதன பொருட்களை பயன்படுத்தி ஒட்டகத்தின் அழகை மெருகூட்டியும் மோசடியில் ஈடுபடுவதாக புகார்கள் எழுந்தன.

இந்த ஆண்டு நடந்த ஒட்டக அழகுப் போட்டியில் இது போன்ற முறைகேடுகள் நடந்தது தெரியவந்தது. இதையடுத்து 43 ஒட்டகங் களை தகுதி நீக்கம் செய்து போட்டியாளர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

வரும் காலங்களில் விதிகளை மீறும் ஒட்டக உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என் றும் போட்டியில் பங்கேற்க தடை விதிக்கப்படும் என் றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சிறந்த நகரங்களில் டுபாய் முதலிடம்

(டுபாய்)
உலகில் பொதுமக்கள் தங்களது இருப்பிடங்களை மாற்றி அமைத்துக் கொள்ள விரும்பும் சிறந்த நகரம் எது? என்பது குறித்து இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆய்வு நடத்தியது. இதில் டுபாய் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

இங்கு ஆண்டு ஒன்றிற்குரிய சராசரி வெப்பநிலை 28.2 டிகிரி ஆகும். இதே போல் மழை அளவு 68 மி.மீற்றர் ஆகும். இதனால் டுபாய் நகரத்தை பொது மக்கள் தேர்ந்தெடுத்து உள்ளதாக அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. 2 ஆவது இடத்தை அபுதாபியும், 5 ஆவது இடத்தை மஸ்கட்டும் பிடித்துள்ளன. (நி-5)

# ஏழு மாத குழந்தைக்கு தவறுதலாக கொரோனா தடுப்பூசி

(சியோல்)
தென் கொரியாவின் சியோங்னாம் பகுதியில் ஏழு மாதக் குழந்தைக்கு தவறுதலாக கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த குழந்தைக்கு ஆபத்துகள் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், மருத்துவர்கள் மீது குழந்தையின் பெற்றோர் வழக்குத் தொடுத்துள்ளனர்.

காய்ச்சல் தடுப்பூசிக்கு பதிலாக அங்கிருந்த மருத்துவர்கள் மொடர்னா நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசியை குழந்தைக்கு தவறுதலாக செலுத்தி விட்டனர்.

சிறிது நேரத்துக்கு பின் இது தெரிய வந்ததும் பெற்றோர் மட்டுமின்றி மருத்துவர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து அந்தக் குழந்தை தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டது.

எந்தப் பக்க விளைவுகளும் ஏற்படவில்லை. பின் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் தங்கள் குழந்தைக்கு தவறுதலாக கொரோனாத் தடுப்பூசி செலுத்திய மருத்துவர்கள் இழப்பீடு வழங்க வேண்டும் எனக்கோரி குழந்தையின் பெற்றோர் வழக்குத் தொடுத்துள்ளனர்.

நெதர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் உள்ளிட்ட சில நாடுகளில் மட்டுமே, 5 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 35 வயதில் சிலியின் ஜனாதிபதியாகிறார் போரிக்



(சாண்டியாகோ)
சிலியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் போது முக்கியத்துவம் பெற்ற இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர் கேப்ரியல் போரிக், நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கிட்டத்தட்ட 99 சதவீத வாக்குச் சாவடிகளில், கேப்ரியல் போரிக் 56 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவரது பழமைவாத எதிராளியான ஜோஸ் அன்டோனியோ காஸ்டுக்கு 44 சதவீத வாக்குகள் கிடைத்தன.

35 வயதில், போரிக் சிலியின் இளைய ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார். அவர் மார்ச் மாதம் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)


JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

**தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்-2021**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள். க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழில் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்**
**Diploma in Agricultural Production technology (NVQ 5 and 6)**
ஆங்கிலமொழி மூலம் / English medium
**பயிற்சிநெறிக் காலம்**
ஒன்று / இரண்டு வருடங்கள் (ஆறுமாதம் / ஒரு வருட கால தொழிற் பயிற்சியுடன்)

**அனுமதி பெறுவதற்கான தகைமைகள்:**
க.பெ.த.(சாதாரண) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடையந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.(உ/த) பரீட்சையில் உயிரியல்/தொழில்நுட்பவியல் / ஏதேனும் ஒரு பாடத் துறையில் கல்வி பயின்று விவசாயப் பாடத்தினைக் கற்று அப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level-04) பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள் க.பெ.த.(சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழி அறிவு (க.பொ.த.(சா/த) /சமமான ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமை)

**வயது எல்லை**
விண்ணப்பதாரிகள் 18 வயது தொடக்கம் 35 வயது வரை

தங்களின் சுயவிபரக் கோவையுடன் அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ 01.01.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும். நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் சுய விபரக்கோவையில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு/ மின்னஞ்சல் முகவரிக்கு அது தொடர்பாக தெரியப்படுத்தப்படும்.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கு/மேலதிக தகவல்களுக்கு (9155)
அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம். தொலைபேசி: 021 224 1400


# மோதலுக்கு அஞ்ச மாட்டோம் அமெரிக்காவை சீண்டும் சீனா

(பீஜிங்)
அமெரிக்காவுடனான மோதலுக்கு சீனா அஞ்சாது. ஆனால் இரு தரப்பிற்கும் நன்மையளிக்கும் ஒத்துழைப்பை வரவேற்கும் என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தெரிவித்தார்.

சீன வெளியுறவுத்துறை இணைய தளத்தில் வெளியிடப்பட்ட வீடியோவில் வாங் யி கூறியதாவது, அமெரிக்க தரப்பின் தவறான முடிவுகள் காரணமாக இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

மோதல் என்று வந்துவிட்டால், சீனா அஞ்சாது, இறுதிவரை சண்டையிடும்.

போட்டி போடுவதில் எந்தவித பாதிப்பும் இல்லை, ஆனால் அது ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தெரிவித்துள்ளார்.

கொரோனா தோற்றம், வர்த்தகம், மனித உரிமைகள் மற்றும் தாய்வான் மீது சீன அழுத்தத்தை அதிகரிப்பது போன்ற விவகாரங்களில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளால் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.

சீனாவின் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் இருந்து இறக்குமதி செய்ய தடை விதிக்கும் சட்டத்தை அமெரிக்க செனட் கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றியது.

ஜின்ஜியாங் பிராந்தியத்தில் மக்கள் கட்டாயப்படுத்தி பணிக்கு அமர்த்தப்படுவதால் தடை விதிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனால், ஜின்ஜியாங்கில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சீனா நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பிலிப்பைன்ஸில் வீசிய 'ராய் புயல்' இதுவரை 208 பேர் உயிரிழப்பு

(மனிலா)
பிலிப்பைன்ஸின் தென்கிழக்குப் பகுதிகளில் ராய் புயல் புரட்டிப் போட்டதில் இதுவரை 208 பேர் பலியாகி உள்ளனர்.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில், "தென் கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸில் கடந்த இரண்டு நாட்களாக வீசிய ராய் புயல் காரணமாக அந்நாட்டின் தென் பகுதிகள் மிக மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளன.

புயலைத் தொடர்ந்து பெய்த கன மழைக்கு இதுவரை 208 பேர் பலியாகி உள்ளனர். 50இற்கும் மேற்பட்டவர்கள் மாயமாகி உள்ளனர். சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் வேண்டி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றனமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் கடல் பகுதியில் 12 இந்திய மீனவர்கள் கைது

## ஜனவரி 3 வரை விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ் நாட்டு மீனவர்கள் தலைமன்னார் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில் 12 மீனவர்களையும் ஜனவரி 3 ஆம் திகதி வரை விளக்கமறியளில் வைக்க மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.


இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம், மண்டபம், தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே மேற்படி கைது செய்யப்பட்டு மன்னார் நீரியல் வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் மேலதிக விசாரணையின் பின்னர் நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்திய நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 திகதி வரை 12 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். 12 மீன்வர்களில் ஒரு மீனவர் திடீர் சுகயீனம் காரணமாக மன்னார் பொது மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டார்.(4-5-285)

# அரச மருத்துவ அதிகாரிகள் பணிபுறக்கணிப்பு போராட்டம்

(மன்னார்)

**மன்னார் பொது மருத்துவமனையில் கடமையாற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் நேற்றுக் காலை பணி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



மத்திய சுகாதார திணைக்களத்தினூடாக கடந்த 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பணியிடை மாற்றம் ஒழுங்கான முறையில் இடம்பெறவில்லை எனவும் குறித்த இடமாற்றம் தொடர்பாக மாவட்ட ரீதியில் உள்ள மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் எந்தவித ஆலோசனையும் மேற்கொள்ளாது மருத்துவர் தேவை உள்ள இடங்களை புறக்கணித்து தேவையற்ற இடங்களுக்கு மருத்துவர்களை நியமித்துள்ளதாக தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் மன்னார் பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவை தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

## வவுனியாவில் எரிவாயு கசிவு

# உரிமையாளரின் முன்னாயத்த நடவடிக்கையால் வெடிப்புச் சம்பவம் தவிர்க்கப்பட்டது

(நெளுக்குளம்)

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளதுடன் வெடிப்பு அனர்த்தம் வீட்டு உரிமையாளரின் முன்னாயத்த நடவடிக்கையினால் தவிர்க்கப்பட்டது.

வவுனியா பண்டாரிக்குளம் உக்கிளாங்குளம் பகுதியில் வசித்து வரும் ஒருவர் எரிவாயுவை பரீட்சித்துப்பார்த்துப் பொருத்தும் நடவடிக்கையை மேற்கொண்டபோது அதில் கசிவு ஏற்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த எரிவாயுவை பொருத்தும் நடவடிக்கையை கைவிட்டு 1311 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு ஏற்படுத்தி தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து கசிவு ஏற்படும் எரிவாயுயை கொடுத்து பிறிதொரு எரிவாயுவைக் கொள்வனவு செய்யுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டது.

எரிவாயு கொள்வனவு செயயும் ஒருவர் அதனைப்பரீட்சித்துப் பார்த்து அடுப்பில் பொருத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கும்போது இடம்பெறவுள்ள அனர்த்தங்கள், சேதங்கள், இழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5-299)

# சட்டவிரோத மணல் அகழ்வு நான்கு பேர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை வண்ணாத்தியாறு பகுதியில் நேற்று முன்தினம் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டதுடன் நான்கு உழவு இயந்திரங்களும் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன. [illegible] செய்யப்பட்டவர்கள் [illegible] பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரனைகளை தருமபுரம் பொலி[illegible] [illegible]. [illegible]



## பத்திரிகை தர்மத்தை நிலைநிறுத்தும் வலம்புரி அகிலம் உள்ளவரை வாழ்க

“மாணிக்க வாசக சுவாமிகள் இடைஅறா அன்பு உனக்கு என் ஊடு அகத்தே நின்று உருகத் தந்தருள் உம் உடையானே” என்கிறார். தூய்மையான ஊடகவியலாளர்கள் உள்ளத்தில் இறையருள் ஊடுருவியுள்ளது. வலம்புரியின் அனைத்து அடக்கமும் அருளின் வெளிப் பாடாகும். திருமுறைகள் இதிகாசங்கள் அனைத்தினதும் கருத்து விளக்கங்கள் நல்லொழுக்கம் உள்ள சமுதாயத்தை உருவாக்க உந்துசக்தியாக அமைந்துள்ளன. சுயநலவாதிகளான போலி மனிதர்களின் செயற்பாடுகளை அஞ்சாது அஞ்சுவது யாதொன்றும் இல்லை என்றவாறு வெளிப்படுத்துகின்ற தற்துணிவு வலம் புரிக்குத்தான் சொந்தமானது என்பது கடந்த 22 ஆண்டு கால வெளிப்பாடாகும்.

வலம்புரியின் தீர்க்கதரிசனமான ஆசிரியர் தலையங்கங்கள் புத்திஜீவிகளின் சிந்தனைக்குரியவை. உதாரணத்திற்கு 2021.12.15 ஆம் திகதி வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் “இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்” என்ற திருக்குறளின் வழிகாட்டல். அதாவது வள்ளுவன் வழிகாட்டலில் செயலில் செயற்பட்டு சாதனை படைத்த மனிதனின் செயற்கரிய சேவை தொடர வேண்டும் என்ற மனித மகத்துவம் போற்றப்பட வேண்டும் என்ற பண்பாடு மனிதம் என்ற மகத்துவத்துள் அடக்கம்.

செய்த சேவையை மறந்தால் தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச்சுடும் என்ற வள்ளுவன் வாக்கு. மனச்சாட்சியை மறந்தால் அறிவால் அறிந்து செயற்பட வேண்டியவர்கள் மரம் போல் நின்றால், ‘கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள் அவை நடுவே நீட்டோலை வாசியாய் நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் மரம்’ என்றாள் ஔவைப் பிராட்டி.

உண்மையை உண்மையாக எழுதுங்கள் என்பது சிவயோக சுவாமிகளின் மகா வாக்கியம். சிவயோக சுவாமிகளின் மகா வாக்கியம். சிவயோக சுவாமிகளின் அருள் ஆணையை கடந்து 22 ஆண்டுகளாக அனுசரித்து நடுவுநிலை தவறா நன்னெறி புகட்டும் வலம்புரி காலமெலாம் தனது சேவையைத் தொடர எம் பிராட்டியாம் நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருளை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**நயினை கலாபூஷணம்**
**நாகமணி - கோபாலகிருஷ்ணன் ஜே.பி.**
*தலைவர் சப்த தீவக திவ்ய ஜீவனசங்க சமாசம்.*



## வலம்புரி நாளிதழே வளமுடனே வாழியவே!!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுள் மக்கள் விரும்பி வாங்கி வாசிப்பது வலம்புரியையே. இது ஒரு மக்கள் தினசரியாகும். அருமையான ஆசிரியத் தலையங்கமும் ஆழ்ந்த கருத்துச் செறிவான கட்டுரைகளும் தன்னகத்தே மிளிரும் வலம்புரிக்கு நிகர் வலம்புரியே.

இக்கட்டான இக்காலகட்டத்திலும் தரம் குறையாமல் ஆன்மிகம், அரசியல், வர்த்தகம் என்று இன்னோரன்ன பலதுறை சார்ந்த விடயங்களை அவ்வப்போது சுடச்சுடத் தரும் வலம்புரி நாளிதழுக்கு நேற்று இருபத்து மூன்று அகவை ஆரம்பமானது.

மக்களின் தேவையறிந்து விடயதானம் செய்யும் வலம்புரி தனது அளப்பரிய சேவையை மீண்டும் நல்ல முறையிலே தொடர எல்லாம் வல்ல நல்லைக்கந்தனின் திருவருள் கிட்ட வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கின்றோம்.

“வலம்புரி நாளிதழே! வளமுடனே வாழியவே! என்று உளமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

எங்களுடைய அபிமானம் நிறைந்த பத்திரிகையான வலம்புரி நாளிதழானது இன்று போல் என்றும் அழகான முறையில் தொடர்ந்து பிரசுரமாகி வாசகர்களின் கைகளில் தவழ்ந்து நாதம் எழுப்பி நிமிர்ந்து நிற்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்க வாழ்க வலம்புரியே வாழியவே!

**கலாபூஷணம் கவிமணி இராசையா ஸ்ரீதரன்** (ஆன்மிக எழுத்தாளரும் நல்லை ஆதீன சமயப் பிரசாரகரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2021 - 13.01.2022

## கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்



**மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்படும் மேஷ இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் இருக்கிறார். அவரோடு கேது இணைந்துள்ளார். லாபஸ்தானத்தில் குரு இருக்கிறார். எனவே பொருளாதார நிறைவு ஏற்படும். உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

### இலாப குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இராசிக்கு அதிபதியானவர் குரு. பாக்கிய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைத்தாலும் விரயங்களும் அதிகரிக்கும். சொத்து விற்பனையால் இலாபம் உண்டு. தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல், இலாகா மாற்றம் கிடைக்கலாம்.

### மகர புதனின் சஞ்சாரம்

மார்கழி 12 ஆம் திகதி, மகர இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகாயஸ்தானம் மற்றும் ஜீவன ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், இப்பொழுது தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். 3 ஆம் இடத்திற்கு புதன் அதிபதியாக இருப்பதோடு, அந்த இடத்தைக் குருவும் பார்ப்புதால் உடன் பிறப்புகள் உதவிகரமாக இருப்பர். சுக்கிரனோடு புதன் இணைந்து புத சுக்கிரயோகத்தை உருவாக்குவதால், பூமி வாங்குவது அல்லது விற்பதன் மூலம் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பாக்ய ஸ்தானத்தில் பஞ்சமாதிபதியோடு கூடும்பொழுது மிகுந்த நற்பலன் கிட்டும். குறிப்பாக




பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியனோடு சுக்கிரன் சேர்வதால் பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். இதன் விளைவாக 'புத ஆதித்ய யோகம்' செயற்படும். கல்வி சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். பிள்ளைகளை நெறிப்படுத்தி வைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கிப் பயணிக்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். இம்மாதம் நடராஜர் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானத்தில் நிறைவு ஏற்படும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். தாய் - தந்தை உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். பணிபுரியும் இடத்தில் நீங்கள் கேட்ட சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபச் செலவு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களை அனுசரித்துக் கொள்வது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும்



**தங்களுக்கு கிடைத்த பதவி கொண்டு பிறருக்கு உதவும் ரிஷப இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசியில் ராகுவும் சப்தமஸ்தானத்தில் கேதுவும் இருக்கிறார்கள். எனவே சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கத்தில் இருக்கின்றது. இராசிநாதன் சுக்கிரன், 'மந்தன்' எனப்படும் சனியோடு ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே செயற்பாடுகள் மந்த நிலையில் இருக்கும். செலவு கூடும். எதையும் நினைத்த மாத்திரத்தில் செய்ய இயலாது.

### பத்தாமிடத்து குருவின் சஞ்சாரம்

இப்பொழுது பெயர்ச்சியான குரு பகவான் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10 இல் சஞ்சரிக்கும் பொழுது பதவி மாற்றம், இடமாற்றம் உண்டு என்பது பொது நியதி. ஆனால் உங்கள் இராசியைப் பொறுத்தவரை தசாபுத்தி வலுவாக இருப்பவர்கள் பயப்படத் தேவையில்லை. வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாகவே அமையும்.

இதுவரை தடைப்பட்டு வந்த உத்தியோகத்திற்கான முயற்சி, இப்போது வெற்றியாகும். தொழில் புரிபவர்களுக்கு பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். தூரதேசத்தில் இருந்து அழைப்புகள் வந்தாலும் அதை யோசித்து ஏற்றுக்கொள்வதே நல்லது.

### மகர புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மார்கழி 12 ஆம் திகதி பாக்கிய ஸ்தானத்திற்கு செல்கிறார். அப்போது எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. 'புத-சுக்கிர யோகம்' செயற்படுவதால் வீடு கட்ட வேண்டும் அல்லது வாங்க வேண்டும் என்று நினைத்தால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் கவனமுடன் செயற்பட வேண்டும். உங்கள் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்தால் யோசித்து செய்வது நல்லது. பயணங்களால் சில பிரச்சினை வரலாம். சுபச்செலவு அதிகரிக்கும்.

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். அஷ்டமத்தில் சூரியனும், சுக்கி




ரனும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். இது அவ்வளவு நல்லதல்ல. சுகாதிபதி 8 இல் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட அச்சுறுத்தல்கள் நிகழலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். அதேநேரத்தில் 6 இற்கு அதிபதி சுக்கிரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது, 'விபரீத இராஜயோகம்' ஏற்படும். பல நாட்களாக நடைபெறாத காரியங்கள் இப்போது நடைபெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதிப் புதிய திட்டங்கள் தீட்டி அதை செயற்படுத்துவீர்கள்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு.

எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். புதிய வாகனம் வாங்கிப் பயணம் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களைப் போக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பணியிடத்தில் இடமாற்றங்கள் உறுதியாகலாம். கணவன்-மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் நாடிவரும்.

பிள்ளைகளின் கல்வி, வேலை வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு பல நாட்களாக எதிர்பார்த்த கனவுகள் நனவாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் - கொழும்பு வீதியில் விபத்தினை அடுத்து வாள் வெட்டு

## ஒருவர் பலி; ஒருவர் காயம்



(புத்தளம்)

புத்தளம்-கொழும்பு பிரதான வீதியின் பங்காதெனிய கோட்டப்பிட்டி சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பங்கதெனிய, கருக்குப்பனையைச் சேர்ந்த 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரே விபத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

கொழும்பில் இருந்து வவுனியா வந்த தனியார் பேருந்து ஒன்றும், எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தினை அடுத்து குறித்த பகுதியில் பெருந்திரளானோர் ஒன்றுகூடியமையால் அமைதியின்மை ஏற்பட்டது.

தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோருடன் அங்கு வந்த இளைஞர்கள் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இந்த வாக்குவாதம் பின்னர் கைகலப்பாக மாறியது.

இதன்போது அங்கு வாளுடன் வந்த நபர் ஒருவர், அங்கிருந்த ஒருவரை வெட்டிக்காயப்படுத்தினார். இதனையடுத்து, நிலைமை மேலும் மோசமடைய சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாருடன் மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரும், இராணுவத்தினரும் அவ்விடத்திற்கு வருகை தந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நபர் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பேருந்து சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# 7 இலட்சம் ரூபாவுக்கு குழந்தையை விற்று ஹெரோயின் வாங்கிய தம்பதிகள் கைது

(குருநாகல்)

மூன்று மாதங்களேயான பச்சிளம் கைக்குழந்தையை 7 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்து அந்நிதியைப் பயன்படுத்தி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் தம்பதியினர் குருநாகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிங்கள நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குருநாகலிலுள்ள சட்டத்தரணி ஒருவரிடம் கடிதமொன்றை பெற்றுக்கொண்டு, அநுராதபுரத்தில் உள்ள தம்பதியினருக்கே குழந்தை இவ்வாறு விற்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட 28 வயதான பெண்ணின் பையில் சிறிய குழந்தையொன்றின் ஆடை இருந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குழந்தை விற்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குழந்தையை விற்ற பணத்தில் 30 ஆயிரம் ரூபாவுக்கு ஹெரோயின் வாங்கி விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

எஞ்சிய பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளனர் என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# எரிவாயு சிலிண்டர்களின் தரத்தைப் பார்த்து வாங்குங்கள்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் தரம் தொடர்பான தரவுகள் பொறிக்கப்பட்ட சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்தார்.




இதற்கமைய, தரநிர்ணய நிறுவனத்தின் தரத்திற்கு அமைய ப்ரொப்பன் அளவு 30 சதவீதமாகவும் பியூட்டேனின் அளவு 70 சதவீதமாகவும் கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், தரம் தொடர்பான தரவுகள் பொறிக்கப்பட்ட சிலிண்டர்களை அவதானித்து பொதுமக்கள் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## வெறுப்பவற்றை விரும்புவது எப்படி?

ஒன்றை எவ்வளக்கெவ்வளவு விரும்புகிறீர்களோ அதை அவ்வளவுக்கவ்வளவு வெறுக்கப் போகிறீர்கள். அதேபோல் ஒன்றை எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதை விரும்பப் போகிறீர்கள். இது தத்துவம் மட்டுமல்ல நடைமுறை உண்மையும் கூட.

ஒருவர் ஒரு விடயத்தையோ ஒரு உணவு வகையையோ ஒரு நபரையோ வெறுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம் அதற்கு அவரால் தர்க்க ரீதியான காரணங்களை கூற முடியுமா? என்றால் பெரும்பாலும் முடியாது என்றே கூறி விடலாம்.

கத்தரிக்காய் சாப்பிட்டால் எனது உடம்பெல்லாம் கண்டு கண்டாக வீங்கி விடும். எனவே நான் கத்தரிக்காயை வெறுக்கிறேன் என்றோ அவன் என் முன்னேற்றத்தையே கெடுத்தவன் அதனால் அவனை அடியோடு வெறுக்கிறேன் என்றோ அவரால் காரணம் படைக்க முடியுமானால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மாறாக காரணம் எதுவுமின்றி அது பிடிக்காது இது பிடிக்காது என்று மைல் நீளத்திற்கு ஒருவர் பட்டியல் இடுவாரேயானால் அது தனக்குத்தானே சிறு வட்டம் ஒன்றைப் போட்டுக்கொண்டு அதற்குள்ளேயே சுற்றி வரும் மடத்தனமான செயலாக இருக்கும்.

நாம் அடியோடு வெறுக்கும் விடயத்தை இன்னொருவர் மிகவும் விரும்புகிறார் என்பது விந்தைக்கு உரிய விடயமல்லவா? அவரால் எப்படி அது முடிகிறது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய கணிப்பில் என்ன கோளாறு? அல்லது மற்றவர் பார்வையில் என்ன சிறப்பு? என்று நாம் எண்ண வேண்டும்.

சரி சற்றும் விரும்பாத ஒரு விடயத்தை ஏற்றுத் தான் ஆக வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலைக்கு நாம் ஆக்கப்பட்டால் என்ன ஆவோம் என்பதையும் எண்ண வேண்டும். சிங்கக் கூண்டினுள் சிக்கிய சிறு நரியின் கதையாக அல்லவா ஆகிவிடும்? அத்தகைய சூழ்நிலை உருவாகும் முன் அல்லது நம் எதிரிகளால் உருவாக்கப்படும் முன் வெறுப்பவற்றைக் கொஞ்ச நஞ்சமாவது நேசிக்க முயல வேண்டும்.

மனம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் உள்ளம் உற்சாகமாக இருக்கும் போதும் உங்களுக்கு மிகவும் பிடிக்காத ஒரு செயலைச் செய்ய மெல்ல முயன்று பாருங்கள்.

அல்லது வெறுக்கும் அந்த உணவு வகையை மெல்லச் சாப்பிட முயலுங்கள். அறிவு என்னும் பார்வையில் தவறான அபிப்பிராயம் என்ற தூசு அடைத்துக் கொண்டு எத்தகைய இருட்டுச் சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டது என எண்ணிப்பாருங்கள்.

ஓர் இன்பமும் ஒரு வித சுவையும் ஒருவித மகிழ்ச்சியும் ஊடுருவிப் பாய்ந்திருப்பதை உணரத் தொடங்குவீர்கள். ஆம் ஏதோ இருக்கத்தான் செய்கிறது. முதலில் பட்டும்படாமலும் இருப்பீர்கள். பிறகு தானாக விருப்பம் வந்துவிடும்.

விரும்புவனவற்றையும் வெறுப்பவற்றையும் அதிக வேறுபாடு காட்டாத மனோபாவத்துடன் ஏற்றுக் கொண்டதால் தான் நாம் விரைந்து முன்னேற முடியும். நம் மனமும் வளமுடையதாக இருக்கும்.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நானே ராஜா



காட்டில் ஆனந்தமாக ஆடிப் பாடியபடி திரிந்து கொண்டிருந்தது நரி.

“நரியே! இன்று நீ மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறாயே! என்ன காரணம்?” என்று கேட்டது கரடி.

“கரடியே! வயதான சிங்கராஜா இன்னும் ஓரிரு வாரங்களில் தனது தலைவர் பதவியை துறந்து விடுவார்.

அதன் பின்னர் அவருக்கு மந்திரியாக இருக்கும் நானே இக்காட்டில் வசிக்கும் எல்லா விலங்குகளுக்கும் தலைவராகி விடுவேன். அதன் பின்னர் நான் என்ன சொல்கிறேனோ, அதைத் தான் நீயும் கேட்டிட வேண்டும்,” என்றது நரி.

“நரியே! உன்னுடைய பதவி ஆசை எனக்குப் புரிகிறது. ஆனால், அதே நேரத்தில் நீ தலைவராக வேண்டும் என்று நினைத்தாலும் சிங்கராஜா சம்மதிக்க வேண்டும்.

சிங்கராஜா சம்மதம் தெரிவித்தாலும் கூட, என் போன்ற மற்ற விலங்குகள் எல்லாம் உனக்கு ஒப்புதல் அளித்திட வேண்டும்.

எனவே, இதெல்லாம் நடக்கிற கதையல்ல என்றே எனக்கு தோன்றுகி றது,” என்றது கரடி. கரடி இவ்வாறு கூறியதும் நரிக்கு ஆத்திரமும், கோபமும் வந்துவிட்டது.

“கரடி நண்பனே! நீ என்ன கூறுகிறாய்? எவருடைய ஒப்புதலும் எனக்குத் தேவையில்லை! சிங்கராஜா எனக்கு எப்போதோ அனுமதி வழங்கிவிட்டார். அதனால் தான் கூறுகிறேன். அவர் பதவிக் காலம் முடிந்த பின்னர் நானே பதவியேற்றுக் கொள்வேன்,” என்றது நரி.

“நரியே! நீ பதவி யேற்றுக் கொள்வதில் உறுதியாக இருக்கிறாய்! ஆனால், கண்டிப்பாக உனக்கு மற்ற விலங்குகளின் ஒப்புதல் வேண்டும். மற்ற விலங்குகளின் ஒப்புதல் இல்லாமல் நீ நிச்சயமாக தலைவராக முடியாது,” என்றது கரடி.

“கரடியே! எனக்கு ஒப்புதல் யார் அளித்தாலும், அளிக்காவிட்டாலும் சிங்கத்தின் துணையோடு நான் தலைவராகி விடுவேன். அதன் பின்னர் எனக்கு ஒப்புதல் தராமல் யார் யார் இருந்தார்களோ அவர்களை எல்லாம் நான் பழிவாங்கிடுவேன்,” என்றது நரி.

“நரியே! இந்த மாதிரியான துர்குணம் உனக்கு இருக்குமானால், நீ நிச்சயமாக தலைவராக மாட்டாய்” என்றது கரடி. அதனைக் கேட்ட நரியோ கரடியை மீண்டும் கோபத்துடன் பார்த்தது.

“கரடியே! உன் பேச்சினைக் கேட்கிற போது நீயே எனக்கு ஒப்புதல் அளித்திட மாட்டாய் என்று எனக்குத் தெரிகிறது. நான் சொல்வது சரி தானே!” என்று கேட்டது நரி.

“நரியே! நீ சொல்வது தவறு! நானும் இந்தக் காட்டிற்கு புதிய தலைவரைத்தான் எதிர்பார்க்கிறேன். அந்த வகையில் உனக்கு கண்டிப்பாக ஒப்புதல் அளித்திடுவேன். (தொடரும்)

# மகாபாரதம்




வீர வாதம் செய்து போர் புரிகையில் எண்ணற்ற வீரர்கள் இறக்கின்றனர். போரில் புறமுதுகு காட்டி ஓடும் வீரரைப் பாவம் துரத்திப் பிடித்துக் கொள்ளும்.

இப்பாவம் மன்னனைச் சாராது கோழைகளையே பற்றிக் கொள்கிறது. இது போலவே கொல்லாமை மேற்கொள்ளும் வீரர் மனம் ஒன்றிப் போரிடவில்லையெனில் அவர்களையும் கொடிய பாவம் பற்றும்.

அரசர்கள் நரகத்தை அடைவர். தன் மன்னனுக்கு வீராவேசம் கொண்டு போரிட்டு உயிர் துறக்கும் வீரன் சுவர்க்கம் அடைவான்.

கருணையுள்ள வீரன் கூடப் பெரு வீரத்துடன் போர் புரிவதில் உற்சாகம் கொள்வான். இங்கு இரக்கத்திற்கு இடமில்லை. பெருவீரன் மான் கூட்டத்தைச் சின்னாபின்னப்படுத்தும் சிங்கம் போல கர்ஜித்துப் போரிட வேண்டும்.

யுத்தத்தில் யானை மீதிருந்து போரி ட்டு மாண்டவன் பிரமலோகத்தை அடைவான். தேரிலிருந்து போரிட்டு உயிர் துறந்தவன் இந்திரர் லோகத்தை அடைந்து இன்பம் அனுபவிப்பான். போர்க்களத்தில் கொல்லப்பட்டவர் சுவர்க்கத்தில் தேவர்களால் பாராட்டப்படுவர்.

கொன்றவர்இங்கு போற்றப்படுவர். எனவே போர்க்களம் செல்லும் வீரன் வெஞ்சமரில் அஞ்சாது போரிட வேண்டும்.

ஆயிரமாயிரம் நதிகள் கடலில் கலப்பது போல, ராஜ தர்மத்துடன் பல்வேறு ஒழுக்கங்கள் அவனை சென்று அடையும்.

தொன்று தொட்டு வரும் தருமங்கள் எல்லாவற்றையும் மன்னன் காப்பாற்ற வேண்டும். தருமத்தை அரசன் கைவிட் டால் , தருமம் அவனை கைவிட்டு விடும்.

எந்த நாட்டில் மன்னன் ஆட்சி செம்மையாய் உள்ளதோ அங்கே மழை தவறாது பெய்யும். நாட்டு மக்கள் பிணி முதலான துன்பங்களின்றி நலமாக வாழ்வர்.

மன்னன் எது நடந்தாலும் பொறுமையாக இருந்தால், ராஜ தருமம் ஒழுங்காக நடைபெறாது.

தீயவர்களைத் தண்டிக்கத் தயங்கக்கூடாது. நல்லவர் களை நன்கு பாதுகாக்க வேண்டும். மன்னன் ஆறிலொரு பகுதியைத் தீர்வையாகக் கொள்ள வேண்டும்.

அப்படிக் கொள்பவன் தன் குடிமக்களைப் பாதுகாக்காமலும், பிற நாட்டைக் கைப்பற்றாமலும் இருத்தல் கூடாது. அத்தகைய மன்னனின் திறமையின்மையைப் பயன்படுத்தி அயல் நாட்டவர் அவன் மீது படையெடுத்து வெற்றி காண்பர்.

அந்நிலையில் எதிரி நாட்டுப் பாவ மெல்லாம் தோல்வியுற்ற மன்னனை வந்து அடையும்.

யுத்தக்களத்தில் வீரத்துடன் போரிட்டு மாண்ட மன்னவன் விமானத்தில் ஏறி வீர சுவர்க்கம் அடை வான். அவன் உடலில் எத்தனை மயிர்க் கால்கள் உளவோ அத்தனை ஆயிரம் ஆண்டுகள் தேவசுகம் அனுபவிப்பான். பின் மண்ணுலகில் மன்னனாகவோ, அறவானாகவோ பிறப்பான். ஆதலால் மன்னன் விழிப்புடன் நாட்டை ஆள வேண்டும் என்று முடித்தார் மகேஸ்வரன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
- தந்தை பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன் தேசத்திலும் சிறப்பில்லா மன்னர்களும் உண்டன்றோ!

"... மன்னர்க்குத் தன் தேசமல்லால் சிறப்பில்லை. கற்றோர்க்குச் சென்ற இடமெல் லாம் சிறப்பு என்றார் ஒளவையார்.

மன்னர்க்குத் தன் தேசத்தில் சிறப்பு இருக்கும் என்பது ஒளவையாரின் அனுமானம்.

ஆனால் தன் தேசத்திலும் சிறப்பில்லா மன்னர்கள் உளர் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், நாடாளும் மன்னன் என்போன் நீதி மானாக வாரிவழங்கும் வள்ளலாக, ஏழை பங்காளனாக விளங்க வேண்டும்.

அப்போதுதான் அவன் மன்னன் என்ற சொல்லுக்குரியவனாகின்றான்.

தன் கன்றை இழந்து பரிதவித்த பசுவுக்கு மனுநீதிச்சோழன் வழங்கிய நீதி மன்னனுக்குரியது.

பொற்கைப்பாண்டியன் தனக்குத் தானே வழங்கிய தண்டனை உலகு உறை மன்னர்களுக்கு முன்னுதாரணமானது.

ஆக, மன்னன் என்போன் குடிமக்களை அனைத்து வசதிகளுடனும் வாழ வைக்கும் தகைமை கொண்டவனாக இருக்க வேண்டும்.

அவ்வாறு மன்னர்கள் இருந்தமையால் தான் ... குடி உயரக் கோன் உயர்வான் என்று அறுதியிட்டுக் கூறினார் ஒளவையார்.

மக்களின் பசி தீர்க்கும் உணவுத் தானியமான நெல் விளையும்போது அதனால் மக்கள் தம் பசிப் பிணி போக்குவர். அந்நாட்டில் மகிழ்வோடு வாழ்வர்.

அவ்வாறு மக்கள் மகிழ்வோடு வாழும் போது மன்னன் உயர்வான். அவன் புகழ் ஓங்கும். அவனுக்கு அந்நாட்டில் சிறப்புக் கிடைக்கும்.

இங்கு மன்னன் என்ற பதம் மன்னராட்சிக் குரியவனை மட்டும் குறிப்பதாக யாரும் நினைத்துவிடக்கூடாது.

மாறாக, ஜனநாயக ஆட்சியில் மக்களால் தெரிவு செய்யப்படும் அதிகாரம் உடைய ஆட்சித் தலைவரும் மன்னர் வகுதிக்குள் அடங்குவர் என்பது புரிதற்குரியது.

எனவே ஜனநாயகக் கட்டமைப்பில் ஆட்சிப் பதவியில் இருக்கக்கூடியவர்கள் உயர்ந்த பண்புடைய மன்னர்களாக விளங்க வேண்டும்.

மக்கள் குறை தீர்ப்பதை அவர்கள் தங்கள் ஆட்சியில் ஆற்ற வேண்டும். அதுவே அரசாட்சிக்கு அழகு.

ஆனால் இங்கு, ஏழை மக்களை பசி வாட்டுகிறது. பொருட்களின் விலை கண்ட பாட்டில் எகிறுகிறது.

கொரோனாப் பெருந்தொற்று மக்களைத் துவம்சம் செய்கிறது.

உணவுப் பொருட்களின் எல்லைமீறிய விலையேற்றத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் மக்கள் பதறுகின்றனர்.

அந்தோ! இதே கதி நீளுமாயின், இந்த நாட்டு மக்களை பசி வாட்டும். வதைக்கும். எங்கும் வறுமை தாண்டவமாடும்.

இத்தகு மன்னர்களுக்கு தம் தேசத்தில் எங்ஙனம் சிறப்பு ஏற்படும்.

அதோ! கொழும்புப் பல்கலைக்கழக வேந்தருக்கு நடந்த அவமானத்தைப் பார்த்தீர்களல்லவா.

சிறப்பில்லா மன்னர்களின் நியமனங்களும் சிறப்பற்றவை என்பதற்கான சான்று தான் கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் வேந்தர் பெருமானுக்கு நடந்த கதி என்றால் அது மிகையன்று.

## மன்னார் பிரதேச சபையில் கலவரம் பெண் உறுப்பினர் வைத்தியசாலையில்

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட அமர்வின் போது ஏற்பட்ட கலவரத்தில் பெண் பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான உறுப்பினர் மன்னார் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட வாக்கெடுப்பு தொடர்பான கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் மன்னார் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஏற்பட்ட வாய்த் தர்க்கங்கள் கலவரமாக மாறியது. பிரதேச சபையின் பெண் உறுப்பினர் ஒருவர் கட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவரை ஒலிவாங்கியால் தாக்க முற்பட்ட நிலையில் குறித்த நபர் பெண் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான பெண் உறுப்பினர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ஞா-285)

## கஞ்சா மற்றும் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்கள் வவுனியாவில் கைது

(குருமன்காடு)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் பொதிகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் நான்கு பேரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தாண்டிக்குளம், புதுக்குளம், மரக்காரம்பளை மற்றும் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 24, 25, 22, 29 வயதுடையவர்கள் ஆவர். (ஞா-250)

## எரிவாயு சிலிண்டர் வெடிப்பு தொடர்பான நிபுணர் குழு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

நாட்டில் எரிவாயு விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஒழுங்குபடுத்தல் குழு ஒன்றை நியமிப்பதற்கும் இரு எரிவாயு விநியோக நிறுவனங்களுக்குமான பொதுவான பரிந்துரைகளையும் உள்ளடக்கிய அறிக்கையை எரிவாயு கசிவுடனான வெடிப்பு சம்பவம் குறித்து ஆராய்ந்த குழுவினர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தனர்.

அறிக்கையில் குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்டகால அடிப்படையிலான பரிந்துரைகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினால் கடந்த இரு வாரங்களில் லிட்ரோ மற்றும் லாஃப் ஆகிய இரு நிறுவனங்களுக்கும் சென்று பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## எல்லை தாண்டிய இந்திய மீனவர்களால் பரு. முனைப் பகுதி மீனவரின் படகு மீது தாக்குதல்

(கரணவாய்)

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதன் காரணமாக பருத்தித்துறை, முனைப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் மோகன்ராஜ் என்ற மீனவரது படகுக்கு இந்திய மீனவர்கள் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தியதால் அவரின் படகு சேதமடைந்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரோலர்களின் அத்துமீறலால் மூன்று மீனவர்களது வலைகள் அறுத்து அழிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சிதைவடைந்த வலைகளை மீட்டுக்கொண்டு மீனவர்கள் கரையை வந்தடைந்துள்ளனர். பருத்தித்துறை முனை கடற்கரையில் இருந்து சுமார் 6 கடல் மைல் தூரத்தில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வலைகள் படுக்கவிட்டிருந்த பகுதியால் நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் இழுவைமடியை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தது. எமது வலைகள், வலைகள்.. என கத்திய போது இந்திய மீனவர்கள் தகாத வார்த்தைகளால் திட்டியும் கற்களைக் கொண்டு தாக்குதலும் நடத்தினர் என முனைப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (ஞா-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், பட்டைகாடு, வேப்பங்குளம் 6 ஆவது வீதி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தைரியமாக இருங்கள்

❖ மனிதன் வாழ்வில் எந்த அளவுக்கு உயர்கிறானோ அந்த அளவுக்கு கடுமையான சோதனைகளைக் கடந்தாக வேண்டும்.

❖ தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விட, போர்க்களத்தில் மாய்வது மேலானது.

❖ திட்டம் எதுவும் தேவையில்லை. அதனால், ஆகப்போவது எதுவுமில்லை. கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். அது போதும்.

❖ கோழை தான் வாழ்வில் பாவம் செய்கிறான். தைரியசாலியோ ஒருபோதும் பாவம் செய்வதில்லை.

❖ மக்களிடம் உண்மையான சமத்துவம் எப்போதும் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதுமில்லை.

❖ சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

❖ மற்றவர்களுக்கு நன்மை செய்யும் முயற்சியில், இந்த உடல் அழிந்து போனால் அதுவே மேலானது.

❖ [illegible] மாரிடமும் எதையும் எதிர்பாராதீர்கள்.

❖ [illegible] நன்மை செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# பொது அறிவித்தல் -2022

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2022.01.01 ஆம் திகதியிலிருந்து எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு சேவை உணர்வுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**01. ஆதன வரி செலுத்துதல்**
2022ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் மற்றும் அச்சுவேலி ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களை கேட்டுக் கொள்கின்றேன். மேலும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

**02. ஆதனப்பெயர் மாற்றம் செய்தல்**
எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினை கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற் கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடை முறைகளைபின்பற்றி பெயர்மாற்றத்தினையும், ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

**03. கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதி வழங்கல்**
1) வலிகாமம் கிழக்குபிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் முழுமையாக 2020.11.01 ஆம் திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகார சபையினது ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளமையினால், அதற்கமைவாக அனைத்து கட்டுமானங்களுக்குமுரிய அனுமதியினை சபையினது திட்டமிடல் குழுவின் மூலமே பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3) அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருந்தால் உரிய உப அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கட்டடஅமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
4) சபையின் திட்டமிடல் குழுவின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள் மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.
5) சபையின் திட்டமிடல் குழுவின் அனுமதியின்றி அமைக்கப்படுகின்ற கட்டடங்கள் மற்றும் சட்ட விரோதமாக விதிமுறைகளை மீறி அமைக்கப்படுகின்ற கட்டடங்கள் தொடர்பில், உரிய கட்டணங்களிற்கு மேலதிகமாக சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தண்டப்பணம் அறிவிடப்பட்ட பின்னரே உரிய அனுமதி வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**04. வீதி ஒழுங்கு முறை பேணல்**
எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவரிற்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள மரக்கன்றுகள் மற்றும் புல்பூண்டுகள், வளவிலிருந்து வீதியை நோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகள், சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை சம்பந்தப்பட்டோர் உடனடியாக அகற்றியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கேதுவாக உரிய வீதி ஒழுங்கை பேணுமாறும் உரிய அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்கும் படியும் பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

**05. வியாபார அனுமதிப்பத்திரம் - 2022**
இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், முச்சக்கரவண்டி தரிப்பிட அனுமதி மற்றும் எமதுபிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2022ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பத்தை 2022.01.31ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2022.03.31ஆம் திகதிக்குள் செலுத்தி 2022ஆம் ஆண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் சபையின் பொதுச்சந்தைகள், மீன்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் ( 1/2கிலோமீற்றர்) சுற்றுவட்ட பிரதேசத்திற்குள் மரக்கறி, மீன் வகைகள், இறைச்சிக்கோழி,கோழி இறைச்சி என்பன விற்பனை செய்யப்படுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும்என்பதனையும்அறியத்தருகின்றேன்.

**06. துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம்**
2022ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை 2022.03.31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**07. சூழல் பாதுகாப்பு உரிமம்**
மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ஆம் திகதிய மற்றும்1534/18 இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினை பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனை புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**08. படவரைஞர்களை பதிவு செய்தல்**
2022 ஆம் ஆண்டு புதிதாக படவரைஞராக பதிவு செய்ய விரும்புவோரும், 2022ஆம் ஆண்டிற்காக படவரைஞர் பதிவினை புதுப்பிக்க விரும்புவோரும் எதிர்வரும் 2022.03.31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும்.

**09. விளம்பரங்களை அமைத்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.**
வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள சகல பொது வீதிகளின் இருமருங்கும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் அரச, அரச சார்பற்ற, தனியார் துறை சார்ந்த சகல விளம்பரங்கள்.வர்த்தக நிலையங்களின் முகப்புக்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பரங்கள் மற்றும் வளவுகளிலிருந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள் தொடர்பில் சபையின் துணை விதி இல: 8:1 இற்கமைய அவற்றிற்கான கட்டணத்தினை உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்விடயம் சார்பாக உரிய விளம்பரத்தினை பொருத்தும் அரச, அரச சார்பற்ற, தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் கடிதம் மூலமான 14 நாட்கள் கால அவகாசத்துடன் உரிய இடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**10. திண்மக்கழிவுகளை அகற்றுதல்**
ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டுசெல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றினை இயலுமானவரை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் புதைத்து அல்லது எரித்து சுத்தத்தை பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள கழிவுப் பொருட்களை உரிய முறையில் தரம் பிரித்து பிரதேச சபையினது கழிவகற்றல் வாகனத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். நடைமுறையிலுள்ள கழிவகற்றல் வாகன ஒழுங்குமுறை பற்றி சபை அலுவலகங்களை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.
அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஏனைய தொழில்முறை நிறுவனங்கள் தங்களது கழிவுப்பொருட்கள் அகற்றுவது தொடர்பில் சபையினது உரிய உபஅலுவலகத்துடன் தொடர்புகொண்டு மாதாந்த கட்டணங்கள் அல்லது தடவைகளிற்கான கட்டணங்களை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை காண்பித்தே சபையினது கழிவகற்றல் வாகனம் மூலம் கழிவகற்றலை மேற்கொள்ளமுடியும். உரிய நடைமுறைகளை பின்பற்றி கழிவகற்றலை மேற்கொள்ளாது சட்டவிரோதமாக கழிவகற்றலை மேற்கொள்கின்றவர்கள் தொடர்பில் உடனடியாகவே சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11. நீர்வழங்கல் சேவை**
பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபை புத்தூர் உப அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீர் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும்.

**12. திரவ கழிவகற்றல் மற்றும் கனரக வாகன சேவை**
மலசலகூட கழிவுகள் மற்றும் திரவக்கழிவுகளை அகற்றும் வாகனத்தின் (கலிபௌசர்) சேவை தேவைப்படுவோர் மற்றும் வீதி உருளை வாகனத்தினுடைய சேவை தேவைப்படுவோர் எமது புத்தூர் உப அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி அச்சேவையினை பெற்றுக்கொள்ளமுடியும்.

**13. பொதுப்பயன்பாட்டு சேவைகள்**
எமது சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கிவருகின்றன. எனவே அச்சேவையினை முழுமையாக பெற்றுக்கொள்ளலாம்.

**14. மயானங்களின் பாவனை**
எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மயானங்களில் (இடுகாடு, சுடுகாடு) ஈமக்கிரியைகளை மேற்கொள்பவர்கள் குறித்த மயான அபிவிருத்திச் சபையினருடன் தொடர்பு கொண்டு அவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**15. பொதுவான விடயங்கள்**
சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பொது இடங்கள், பொது வீதிகள், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும்வகையில் பட்டாசு கொளுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேலே வழங்கப்பட்டுள்ள அறிவித்தல்களிற்கு மாறாக செயற்படுவோர் மீது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ் அறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கட்டண விபரங்களை தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ் ,தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**2021.12.21**

(கி-3314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 பேர்...

கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,771 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## எரிபொருளின்...

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை அடுத்து டொலர்களை எரிபொருளை இறக்குமதி செய்ய பயன்படுத்தினால் அந்நிய செலாவணி இல்லாமல் பெரும் நெருக்கடியை நாடு எதிர்நோக்கும் நிலையில் எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோல் ஒரு லீற்றர் 35 ரூபாயாலும் டீசல் ஒரு லீற்றர் 24 ரூபாயாலும் மண்ணெண்ணெய் 11 ரூபாயாலும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் எரிபொருள் தேவையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கடிதத்தை அவர் டிசம்பர் 10ஆம் திகதி எழுதியுள்ளார்.

எனினும், இந்தக் கடிதத்திற்கு நிதி அமைச்சு இதுவரை பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## எரிபொருள்...

இலங்கை கனியவள கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.
















எனவே ஜனவரி மாதத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி மசகு எண்ணெய் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

இதற்கு முன்னர் மசகு எண்ணெய் நாட்டுக்குக் கொண்டு வரப்படாவிடத்து சுமார் 20 நாட்களுக்கு சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் தற்காலிகமாக மூட வேண்டிய நிலை ஏற்படும் என கூறப்படுகிறது. (ஞா)

## நல்லூர் முட...

பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33,104)

## தமிழ் பேசும்...

நாதன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட மேலும் சில கட்சிகளின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, 13ஆம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக இன்றைய தினம் மூன்றாம் கட்ட சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தவறாது கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஞா)

## ஒன்றரை வயதுக்...

பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை குழந்தைக்கு திடீர் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

எனினும் சிகிச்சை பலனின்றி அன்றிரவு 9 மணிக்கே அக் குழந்தை உயிரிழந்து விட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா-33)

## தமிழ் மக்களின்...

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**கேள்வி :-** தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டமை வியப்பை அளிக்கின்றது. சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது என்றும் நீங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தூக்கிப் பிடிப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்கள். உங்கள் பதில் என்ன?

**பதில்:-** பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு என்றுமே தீர்வாகாது என்பதை நான் முற்றிலும் ஏற்கின்றேன். அதுவே தீர்வு என்று நான் எந்தக் காலத்திலும் கூறவில்லை. கூறவும் மாட்டேன். 13ஆவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சியின் கீழ் அமைந்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் (Decentralization) நாங்கள் எங்கள் தீர்வாக சமஷ்டி அடிப்படையில் கேட்பது அதிகாரப் பகிர்வு (Devolution).

எமது கட்சியின் நிலைப்பாடு கூட்டு சமஷ்டி அரசாங்க[illegible] தேச சமூகத்தின[illegible]

வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக இறுதித் தீர்வினை எமது மக்கள் தெரிவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் எதிர்பார்ப்பாகும். இதனையே, கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் கூறியிருந்தோம்.

இந்த இளம் அரசியல்வாதிகள் இருவருமே எம் தமிழ் மக்களின் அறிவுசார் பாராளுமன்றப் பிரதிநிதிகள். நான் கூறுவனவற்றை அவர்கள் புரியாது பேசுகின்றார்களா? அல்லது புரிந்தும் அரசியல் காரணங்களுக்காக என் மேல் மக்களிடையே வெறுப்பேற்ற முனைகின்றார்களா? என்று எனக்குத் தெரியாது. இருக்கும் சட்டத்தின்கீழ் அதிகாரப் பரவலாக்கம் கேட்கின்றோம். தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக அதிகாரப் பகிர்வைக் கேட்கின்றோம்.

13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்கமுடியாது. அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் இரு சமாந்திரக் கோடுகள். ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பரவலாக்கம் ஒரு திசை என்றால் அதற்கு சமாந்திரமாகவே மறுதிசையில் அதிகாரப் பகிர்வு செல்கின்றது. சமாந்திரக் கோடுகள் ஒன்று சேரா. ஆகவே ஒன்று மற்றையதின் ஆரம்பப் புள்ளியல்ல.

எமது கூட்டுக்கட்சிகள், 13ஆவது திருத்தச் சட்டம் எமது அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வாகும் என்று எங்குமே கூறவில்லை. கூறமுடியாது. மாறாகச்சமஷ்டி அரசியல் யாப்பொன்றே எமக்கு நிரந்தரத் தீர்வளிக்கும் என்றுதான் கூறி வருகின்றார்கள். எங்கள் கட்சி, அதாவது தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி கூட்டுசமஷ்டிமுறையே நிரந்தர தீர்வைத் தரும் என்று கூறுகின்றது என்றுள்ளது. (ஞா)

## வீடு தீயில்...

விக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ9 வீதியின் நீதிமன்றத்துக்கு அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்கே இவ்வாறு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

வீட்டுப் பொருட்கள் முற்றுமுழுதாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீமெந்து மற்றும் ஏனைய பொருட்களும் சேதமாகியுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா)

## 14...

ஊர்காற்றுறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 14 பேர் இலங்கைகடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[illegible] குறித்த [illegible] கைது

நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அவர்கள் பயணித்த படகுகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்கைதாகிய 14 பேருடன் கடந்த 3 நாட்களில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் மொத்த எண்ணிக்கை 69 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## கூப்பன் அடிப்...

நாணயக்கார முன்வைத்துள்ளார்.

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை சாதாரண மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். இதற்கு தீர்வாக, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கூப்பன் அடிப்படையில் அத்தியாவசிய உணவுகளை விற்பனை செய்யும் திட்டத்தை முன்மொழிவதாகவும் அவர் தெரிவித்தார். (ஞா)

## கிணற்றில்...

வெளிப் பகுதியில் அமைந்துள்ள பாரிய தோட்டக்கிணற்றில் நீராடுவதற்காக சிறுவன் ஒருவன் நேற்று குதித்துள்ளான்.


குறித்த சிறுவன் தனது ஆடைகளை கழற்றி கிணற்றின் அருகில் வைத்துவிட்டு கிணற்றுக்குள் குதித்துள்ளான்.


இதனை அவதானித்த அவரது நண்பர்கள் கிணற்றுக்குள் சென்றுபார்த்த போது, அந்த சிறுவனைக் காணவில்லை.


இதனையடுத்து கடற்படையினரின் உதவி கோரப்பட்டு தேடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றது.

குறித்த சம்பவத்தில் அகிலேஸ்வரன் தனுசன் என்ற 16 வயதுச் சிறுவனே காணாமல் போயுள்ளான். (ஞா-299)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கொலைக்கு நீதிகோரி முல்லையில் கண்டனப் போராட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடையார் கட்டு வடக்கு மூங்கிலாறு கிராமத்தில் கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதிகோரி முல்லைத்தீவு மூங்கிலாறு கிராம மக்களால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று மூங்கிலாறு கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மூங்கிலாறு சந்தியிலிருந்து பேரணியாக உடையார்கட்டு மகா வித்தியாலயம் வரை பேரணியாக சென்று கறுப்பு கொடிகள் மற்றும் கறுப்பு பட்டிகளை அணிந்து கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (ஞா-281)



## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

# நாடு தழுவிய ரீதியில் இன்று போராட்டம்

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று 5 மாவட்டங்களில் ஆரம்பித்த வேலைநிறுத்தை இன்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 5 மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்றைய தினம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சினால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக அந்த சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் குறிப்பிட்டார். (ஞா)

# வவுனியாவில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான 34 வயதுடைய பெரியசாமி நாகராஜன் என்பவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஞா-250)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப்பிரிவு
விசேட செயலமர்வு
A/L 2021 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரியது
26 and 27 DECEMBER 2021 - பொறியியல் தொழிநுட்பவியல், உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
28 and 29 DECEMBER 2021 - தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30 and 31 DECEMBER 2021 - ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஊடகக் கல்வி
அனுமதி இலவசம்
கருத்தரங்கிற்கு ஏன் சமூகமளிக்க வேண்டும்...
- 5 வருடமாக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்...
- A/L பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களால் கருத்தரங்கு மேற்கொள்ளப்படுகிறது.
- பரீட்சையை எதிர்நோக்கிய வினாக்கள் அடங்கிய வினாத்தாள் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும்.
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில் யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு... 0770175346
(C-3310)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு (9161)
077 814 7389, 070 705 1655

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9158)
076 825 7716 (ஆகாஸ்)

உங்கள் உணவுப் பொருட்களை வெற்றிகரமாக சந்தைப்படுத்துவது எப்படி
செவ்வாய், 21 டிசம்பர் 2021 நேரம்:02.00pm-03.00pm SLT
சர்வதேச சந்தையில் நிறுவனத்தின் வெற்றியினை உறுதி செய்வதில் உணவு உற்பத்திப் பொருட்களின் பொதியிடல், பட்டியலிடல் மற்றும் தரச்சான்றிதழ் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. உங்கள் தொழிற்துறை/ வணிகத்தை பாதிக்கும் தற்போதைய நகர்வுகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப்பற்றி இக் கருத்தமர்வினூடாக அறிந்து கொள்ளமுடியும். நீங்கள் இந்த இணையவழி கருத்தரங்கில் பங்கேற்பதன் மூலம் வளவாளர்களிடமிருந்து நேரடியாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன், உங்களின் உணவு உற்பத்திகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் தரக் கட்டுப்பாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதனை உறுதிசெய்து கொள்ள முடியும்.
பேச்சாளர்கள்:
Mr. Vinayakarasa Thirumalavan
MSc, BSc(Spcl), Food Safety Specialist, CCIY
Mr. Malintha Gajanayake
Head of Corporate Affairs & Export Promotions Delegation of German Industry and Commerce in Sri Lanka BBA(Hon). UK.
Mr.Kanagasabathy Nanthakumaran
FCMA (UK), CGMA, MBA(Aus) Consultant - Business Development

CCIY is inviting you to a scheduled Zoom meeting
Topic: Webinar on Food Packaging, Labelling & Certification.
Time: Dec 21, 2021 02:00 PM SLT
Join Zoom Meeting https://us02web.zoom.us/-j/83618607973?pwd=TDdxNHNrSll6UzdG-Mzgyb3FydHhldz09
Meeting ID: 836 1860 7973
Passcode : 026945
மொழி: ஆங்கிலம் & தமிழ்
வட பிராந்திய நிறுவனங்களுக்கென ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தரங்கு.
தொடர்புகளுக்கு:
யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்.
இல.88 கச்சேரி,நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.
Manager Admin
+94 21 222 6609, 070 366 3604
info@cciy.lk
(C-3317)
எடுத்துச் செல்வது பின்வருமாறு:
• சந்தையின் நவீன போக்கிற்கு ஏற்ப பொதியிடல், பட்டியலில் மற்றும் சான்றுப்படுத்தல் அத்துடன் ஐரோப்பிய சந்தைகளுக்கு கூடியகவனம் செலுத்தப்படுகிறது.
• சந்தையின் போட்டித்தன்மைக்கேற்ப புத்தாக்க பொதியிடல் அதனுடன் தொடர்புடைய தேவைப்பாடுகள்.
CCIY வெபினார் தொடரின் 1 பதிப்பு

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL
(C-3286)

கடை வாடகைக்கு
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கு நிலையில் சகல தளபாடங்களுடனும் கடை வாடகைக்கு உண்டு. (9162)
076 704 9048

சிறுநீரகம் தேவை
42 வயதையுடைய
O பொசிற்றிவ்
இரத்த வகையைச் சேர்ந்த
ஒருவருக்கு உடனடியாக
சிறுநீரகம் தேவை. (C-3316)
077 396 5583
077 517 1307

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3237)

கண்ணீர் அஞ்சலி
ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தரும்
அகில இலங்கை சமாதான நீதிவானும்
எம் ஆருயிர் நண்பன் மகாலிங்கம் சுலக்சன்
அவர்களின் அன்புத் தந்தையாருமான
அமரர்
கிருஸ்ணபிள்ளை மகாலிங்கம்

தோற்றம் : 30.07.1949 மறைவு : 19.12.2021
அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காக
எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
யாழ். நகர் (9166)
சுலக்சனின் நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.